CTC NETWORK கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்

https://ctcnw.org/

# அன்பு மக்களே!

ADMIN/Downloads/images/APRIL-MAGAZINE.01_03.jpg

தமிழ் கத்தோலிக்க மாதாந்த வெளியீடு சித்திரை 2026 ஏளி 32 கதிர் 314

TAMIL CATHOLIC PUBLICATION APRIL 2026 YEAR 32 VOl: 314

## ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா சிறப்பு மலர்



சித்திரை மாதம்
திவ்விய நற்கருணை மாதம்



உள்ளடக்கம்............

கிறிஸ்து உயிர்த்தார் - கல்லறையும் கருவறையானது
இறை இரக்க திருவிழா
புனித பவுஸ்தினாவும் 25 இறை இரக்க இரகசியங்களும்
செய்திகள்
யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட குருக்களுக்கான புதிய பணி நியமனம்
புலம்பெயர்ந்தோரும் தமிழ் புத்தாண்டும்
சித்திரை மாதம் திவ்விய நற்கருணை மாதம்
கிறிஸ்து உயிர்ப்பு மரண அடிமைத்தன உடைப்பு
உலக இளைஞர் தினம் 2027
கனடா தமிழ் கத்தோலிக்க இணைய ஐரோப்பிய திருப்பயணம்




"நான் உலகை வென்றுவிட்டேன்", (யோ.16:33)

## ஸ்தாபிதம்

ஆனி 1995

**முகவரி**

41 EARL STREET, TORONTO.

ON.M4Y 1M4 CANADA

Email :

tamilcatholicpublication@gmail.com

**தோலை பேசி** : +1(647) 852-3141

**தயாரிப்பு + வெளியீடு**

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்

**ஆசிரியர் குழு**

திரு தோமஸ் டேவிட்

சகோ. மரீனா அந்தோனிப்பிள்ளை

**ஆலோசனை குழு**

அருட்பணி வார்கீஸ் செல்வராஜா

அருட்பணி அந்தோனிப்பிள்ளை தோமஸ்

அருட்பணி யூபின் லோரன்ஸ்

**தெழில் நுட்ப உதவி**

திரு மரியதாஸ்

சகோ. மரீனா அந்தோனிப்பிள்ளை

**விநியோகஸ்தர்கள்**

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்

தன்னார்வத்தொண்டர்கள்

**கிடைக்கும் இடங்கள்:**

**ரொறொன்ரோ**

புனித அந்தோனியார் தேவயலயம்

புனித லூர்து மாதா தேவாலயம்

புனித ரோசா லீமா தேவாலயம்

புனித பர்னபாஸ் தேவாலயம்

புனித எயார் வேய்ஸ் தேவாலயம்

**மாக்கம்**

தோமாஸ்மோர் தேவாலயம்

போனிபஸ் தேவாலயம்

**டொன்மில்ஸ்**

புனித 23ம் அருளப்பர் தேவாலயம்

தமிழ் கத்தோலிக்க புதுவாழ்வுக்குழு

தமிழ் மொழ் கற்கும் வகுப்புக்கள்

மெக்கா சிற்றி வர்த்தக ஸ்தாபனங்கள்

**ஆதரவு**

**கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்**

**https://ctcnw.org/**


## ஆசிரியர் தலையங்கம்



அன்பு மக்களே! முதற்கண் உங்கள் அனைவருக்கும் உயிர்த்த ஆண்டவரின் சமாதான வாழ்த்துக்கள்.

இது சித்திரை மாதம். ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவை கொண்டாடும் மாதம். அமைதி சமாதானம் அற்ற இந்த உலகிற்கு உயிர்த்த ஆண்டவரின் அமைதி சமாதானத்தை இந்த சித்திரை மாத அன்பு மக்களே சஞ்சிகை கொண்டுவருகின்றதையிட்டு பேருவகை கொள்கின்றோம்.

விசேட விதமாக இறை இரக்கம் இந்த உலகை இரட்ச்சிக்கத் துடிக்கும் உயிர்த்த ஆண்டவரின் தண்ணீரும் இரத்தமும் வழிந்தோடும் இறை இரக்க விழாவின் முழுமையான ஆன்மீகம், மற்றும் கடவுள் நம்மோடு எப்பொழுதும் வாழும் திவ்விய நற்கருணையை கொண்டாடும் மாதமான இந்த மாதத்தில் திருஅவை கொணரும் ஆன்மீகம், குறிப்பாக தமிழ் புத்தாண்டை கொண்டாடும் மக்களுக்கான செய்திகளும் வாழ்த்துக்களும் என பல்முக வாழ்வியல் ஆன்மீக்ததை இந்த சஞ்சிகை தருகின்றது.

அண்மையில் அல்ஜீரியாவில் திருத்தந்தை 14ம் லியோ, அமைதி, நல்லிணக்கம் மற்றும் மன்னிப்பு குறித்து ஒரு சக்திவாய்ந்த செய்தியை வழங்கினார். உண்மையான அமைதி என்பது வெறுமனே மோதல்கள் இல்லாத நிலை மட்டுமல்ல, நீதி மற்றும் மன்னிப்பு நிலவுவதே ஆகும் என்று அவர் வலியுறுத்தினார். இன்றைய மத்தியகிழக்கு நாடுகளிலே யுத்தம் நிலவிவரும இந்நேரத்திலே், இவரது நான்கு நாடுகளுக்கான ஆப்பிரிக்கப் பயணத்தில் இந்த உரை ஒரு முக்கியத் தருணத்தைக் குறிக்கிறது.

அறிவிற்கும் ஆன்மீகத்திற்கும் பயனுள்ள இவ் சஞ்சிகையில், திருஅவையின் அனைத்து நிகழவுகளையும் முக்கிய செய்திகளையும் மிகைப்படாமல் உங்களுக்கு தந்துதவவதோடு, குடும்பம் மற்றும் சமூக நன்மை கருதியும் பல ஆன்மீக கட்டுரைகளையும் தருகின்றோம். இதனோடு, நமது கனடா தமிழ் கத்தோலிக்க இணைய நிகழ்வுகளையும் தந்து இயலுமானவர்கள் எமது நிகழ்வுகளில் மங்கெடுத்து பயன்பெறவும் அழைக்கின்றோம்.

**அன்புடன் ஆசிரியர் டேவிட் தோமஸ்**



## கிறிஸ்து உயிர்த்தார் - கல்லறையும் கருவறையானது

கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார் (பிலி.2:6-9).

இயேசுவின் பிறப்பிற்கு மரியன்னையின் திருஉதரம் கருவறையானது போல இயேசுவின் உயிர்ப்பிற்கு கல்லறையும் கருவறையானது. ஆக இயேசுவின் பிறப்பிலும் இறப்பிலும் “கடவுள் நம்மோடு இம்மானுவல்”, (FOR GOD IS WITH US FOR ETERNITY) ஆக நம்மோடு வாழ்கின்றார்.

உயிருள்ள இறைவன் நம்மோடு இம்மானுவலாக குடிகொள்ள வந்தார்; வேண்டப்படாத பிள்ளைகளை அணைத்து, விபச்சாரிகளை மன்னித்து, சமூகத்தின் கீழ்மட்டத்தவர்களுடன் உணவருந்தி, பாவிகளை இரட்சித்து, இரக்கம், ஆசீர்வாதம், அன்பு ஆகியவற்றின் செயல்களில அழுக்கான எம் கரங்களை. பரிசுத்தமாக்கினார். இந்த இரக்கச் செயல்கள் மிகவும் உண்மையானவையாகவும் ஆழமானவையாகவும் இருந்ததால், அவற்றை மரணத்தால்கூட நசுக்க முடியவில்லை. வெறுமையான கல்லறை என்பது, இறுதியில் அழகு களங்கப்படாது, சத்தியம் மறுக்கப்படாது, நன்மை தோற்கடிக்கப்படாது என இறைவன் அளித்த மாபெரும் உத்தரவாதங்கள் நிறைவேறும் கருவறையாகும். இதுவே வெறுமையான கல்லறையின் செய்தி; அதைத்தான் இந்த உயிர்ப்பு விழாவில் நாம் கொண்டாடுகிறோம்.

இயேசுவின் உயிர்ப்பில், மகிமை பொருந்திய மனித உடலை கொண்ட மனிதன் ஆனார். அதாவது அழிவுக்குரியது அழியாமையையும், சாவுக்குரியது சாகாமையையும் அணிந்து கொண்டு மகிமைபொருந்திய மனித உடலை எடுத்து அவதாரம் எடுத்தார், (1கொ.15:54).

வெறுமையான கல்லறைறை புதுப்பிறப்பின் கருவறையாக்கி, இறைவன் தமது படைப்பு நல்லது என்று மீண்டும் ஒருமுறை பிரகடனம் செய்கிறார்!

இந்த அற்புதமான இரக்கத்தின் செய்தி நம் இதயங்களை நிரப்பவும், நம் மனங்களுக்கு சவால் விடவும் நாம் அனுமதிக்கும்போது, முதல் ஈஸ்டர் அன்று சீடர்களைப் போல நாம் பதிலளிப்போம். வெறுமையான கல்லறையைப் பற்றி மக்களுக்குச் சொல்ல நாம் ஓடுவோம்; அவ்வாறு ஓடும்போது, இறைவனுடைய உயிருள்ள பிரசன்னத்தை உணர்வோம். கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்; அவர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார்! இம்மானுவெலாக என்றும் நம்மோடு குடிகொண்டுள்ளார் என்பதை நம் வாயாலும் வாழ்வாலும் போதிப்போம்.


அருட்பணி தோமஸ் அந்தோனிப்பிள்ளை

# "இறை இரக்க திருவிழா"

(ஈஸ்ரர் விழாவிற்கு பின் வரும் 1ம் ஞாயிறு)

## FEAST OF DIVINE MERCY

1st Sunday after Easter



"இறை இரக்க திருவிழா" இது திருவிழாக்களுக்கெல்லாம் திருவிழா! இது கருணைத் திருவிழா! 1938-ல் காலமான, போலந்து நாட்டைச் சேர்ந்த துறவற மடத்து கன்னியாஸ்திரியான சகோதரி மரிய பவுஸ்ரினா கோவோல்ஸ்காவிற்கு அருளப்பட்ட தனிப்பட்ட வெளிப்பாடுகளிலிருந்து இந்தத் திருவிழா உருவானது. 2000-ஆம் ஆண்டில், புனித திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் அவர்களால் இவர் புனிதராக அருட்பொழிவு செய்யப்பட்டதுடன், மேலும் இவ் இறை இரக்கத்திருவிழா திருச்சபையின் உலகளாவிய திருவிழாவாகவும் நிறுவப்பட்டது.

இது வெறும் ஒரு இரண்டாம் நிலை பக்திமுயற்ச்சி அல்ல, மாறாக "நற்செய்தியின் கரு" ஆகும்—பாவம் நிறைந்த உலகிற்கு வழங்கப்படும் கடவுளின் அன்பு, இரக்கம் மற்றும் மன்னிப்பு. இறைவனின் எல்லையற்ற மற்றும் அளவிட முடியாத இரக்கம், இன்னும் பாவத்துடன் போராடுபவர்களுக்கான இறை இரக்கமாகும். இயேசு கூறுகிறார், "பாவி எவ்வளவு பெரியவனோ, அவ்வளவு பெரிய உரிமை அவனுக்கு என் இரக்கத்தைப் பெறுவதற்கு உண்டு" (பவுஸ்ரினா கையேடு ரூ723). இறை இரக்கம் என்பது இறைவனின் மென்மையும் இரக்கமுமே ஆகும். அவரிடம் ஓடிச் செல்லுங்கள், அவர் மீது நம்பிக்கை வையுங்கள், உங்கள் ஆன்மாவை அவருக்குத் திறந்து காட்டுங்கள், மேலும் அவர் கருணைக் கடலைப் பொழிவதற்கு அனுமதியுங்கள்.

புனித பவுஸ்தீனாவிற்கு இறை இரக்க ஆண்டவர் தன்னை வெளிப்படுத்திய காட்சியில், இயேசுவின் இதயத்திலிருந்து இரண்டு கதிர்கள் ஒன்று சிவப்பு நிறக்கதிர், இது சிலுவையில் இயேசுவின் விலாவிலிருந்து ஓடிய இரத்தத்தைக் குறிக்கின்றது. மற்றையது, வெள்ளை நிறக்கதிர், இது இயேசுவின் விலாவிலிருந்து ஓடிய தண்ணீரை குறிக்கின்றது. சிவப்பு நிறக்கதிர் ஆன்மாக்களின் உயிராகிய இரத்தத்தையும், வெள்ளை நிறக்கதிர் ஆன்மாக்களை நீதிமான்களாக்கும் தண்ணீரையும் குறிக்கிறது.

முக்கியத்துவம்: இது நவீன காலங்களில் "இறுதிக் காலங்களுக்கான ஓர் அடையாளமாக" இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. இது "நீதியின் நாளுக்கு" முன் மனந்திரும்புதலுக்கான ஓர் அழைப்பாக அமைகிறது.


### இறையியல் மற்றும் பக்தி அம்சங்கள்

கடவுளின் இரக்கமானது மனிதனின் பாவத்திற்கான ஒரு பதிலாகவும், அவருடைய மன்னிப்பைப் பின்பற்றுவதற்கான ஓர் அழைப்பாகவும் இருக்கிறது என்பதை வலியுறுத்துகின்றது.(லூக் 6:38, மத் 5:7).


ஜெபமாலை: முழு உலகிற்கும் இரக்கத்தை வேண்டி உருவாக்கப்பட்ட ஒரு ஜெபம், இதனை அனுதினம் ஜெபிக்க வேண்டும் என்றும், இதனை பேரருளின் நேரமாகிய பிற்பகல் 3 மணி நேரத்தில் ஜெபிப்பதும் சாலச் சிறந்தது.

இயேசுவே நான் உம்மில் நம்பிக்கை வைக்கின்றேன்

புனித பவுஸ்தினா



திறந்திருக்கும் பரலோக வாயில்



புனித பவுஸ்தினாவின் கன்னியர் மடம்



இறை இரக்க ஆண்டவர் வெளிப்படுத்தல் இடம்

புனித பவுஸ்ரினாவின் ஆன்மீக ஆலோசகர் குரு



அருட் பணி சொப்போக்கோ

இறை இரக்க பக்தியை அங்கீகரித்தவர்




திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர்

நிஜ இறை இரக்க படம்



இறை இரக்க ஆன்மீகம்





# சாத்தானை எதிர்த்துப் போராட, புனித பவுஸ்ரினாவுக்கு இயேசு வெளிப்படுத்திய 25 இரகசியங்கள்



புனித பவுஸ்ரினாவின் நாட்குறிப்பில், சாத்தானை எதிர்த்து, பரிசுத்தத்தில் வளர உதவும் சக்திவாய்ந்த ஆன்மீக ஆயுதங்களை இயேசு வெளிப்படுத்தினார். இந்த எளிய ஆனால் சக்திவாய்ந்த பயிற்சிகள் ஆன்மாவைப் பாதுகாக்கவும், கடவுள் மீதான நமது நம்பிக்கையை வலுப்படுத்தவும் உதவுகின்றன.


1.கடவுளின் இரக்கத்தில்முழுமையாக நம்பிக்கை வையுங்கள்.
2.குறிப்பாக சோதனை நேரங்களில், இடைவிடா-மல் ஜெபியுங்கள்.
3.இயேசுவின் திருநாமத்தை அழையுங்கள்.
4.இறை இரக்க ஜெபமாலையை ஜெபியுங்கள்.
5.திருச்சடங்குகளை, குறிப்பாக பாவ அறிக்கை மற்றும் நற்கருணையை, அடிக்கடி பெற்றுக் கொள்ளுங்கள்.
6.தாழ்மையைக் கடைப்பிடித்து, பெருமையை நிராகரியுங்கள்.
7.ஆன்மாக்களின் இரட்சிப்புக்காக பலிகளை ஒப்புக்கொடுங்கள்.
8.கடவுளின் சித்தத்திற்குக் கீழ்ப்படியுங்கள்.
9.கிறிஸ்துவின் பாடுகளைத் தியானியுங்கள்.
10.புனித கன்னி மரியாளின் உதவியை நாடுங்கள்.
11.விசுவாசத்துடன் சிலுவை அடையாளம் இடுங்கள்.
12பாவத்திற்கான சந்தர்ப்பங்களைத் தவிர்த்-திடுங்கள்.
13துன்பத்தில் பொறுமையுடன் இருங்கள்.
14.அன்பு மற்றும் மன்னிப்பைப் பயிற்சி செய்யுங்கள்.
15.புனித நீர் மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட பொருட்கள் போன்ற அருட்சாதனப் பொருட்களைப் பயன்படுத்துங்கள்.
16.தினசரி ஜெபத்தில் உண்மையுடன் நிலைத்-திருங்கள்.
17.மனச்சோர்வுக்கு எதிராக விழிப்புடன் இருங்கள்.
18.கடவுளின் திட்டம் புரியாதபோதும் நம்பிக்கை வையுங்கள்.
19.உங்களைத் துன்புறுத்துபவர்களுக்காக ஜெபியுங்கள்.
20.உங்கள் போராட்டங்களை அன்புடன் கடவுளிடம் அர்ப்பணியுங்கள்.
21.கடவுளுடன் அமைதியையும் தியானத்தையும் நாடுங்கள்.
22.திருமறையை வாசித்துத் தியானியுங்கள்.
23.சோதனைகளின் போது விசுவாசத்தில் நிலை-லைத்திருங்கள்.
24.கடவுளின் வாக்குறுதிகளில் நம்பிக்கையுடன் வாழுங்கள்.
25.தெய்வீக இரக்கத்தின் மீதான பக்தியைப் பரப்புங்கள்.

இந்த ஆன்மீக ஆயுதங்கள், எதிரியின் எந்தவொரு தாக்குதலையும் விட கடவுளின் இரக்கம் வலிமையானது என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன. ஜெபம், நம்பிக்கை மற்றும் விசுவாசத்-தின் மூலம், நாம் சோதனையை வென்று கிறிஸ்துவுக்கு நெருக்கமாக இருக்க முடியும்.

இயேசுவே நான் உம்மில் நம்பிக்கை வைக்கின்றேன்

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்
CANADA TAMIL CATHOLIC NETWORK https://ctcnw.org/

## கனடா தமிழ் கத்தோலிக்க இணையமும் கனடா திருமறைக்கலாமன்றமும் இணைந்து



ஆயுதம் அற்ற உலக சமாதானம்" என்னும் கருப்பொருளில் :பங்குனி 6, 2026, மதியம் நேரம்:11.30க்கு புனித வெள்ளிக் கிழமை, சிலுவைப் பாதை வழிபாட்டுடன் பாத யாத்திரை முன்னெடுத்திருந்தோம்.

இலக்கம் 2210 அமைந்துள்ள புனித லோறன்ஸ் ஆலயத்தில் ஆரம்பமாகிய, போது, ரொறொன்ரோ மாநகர காவல்துறை பாதுகாப்பு வளங்க, கனடா தமிழ் கத்தோலிக்க இணைய இயக்குனர் தோமாஸ் டேவிட் அவர்கள் ஆரம்ப உரையையும், முதலாம் நிலையையும் வாசித்து ஆரம்பித்து வைத்தார்.

ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொருவரும் இணைந்து சிலுவை சுமக்கவும், இறைவன் இயேசுவின் பாடுகளை வாசிக்கவும் பாடல்களைப்பாடவும் அமைதியாக சிலுவைப்பாதை நடைபாதையாக தொடர்ந்து சென்றது. காவல்துறை பாதுகாவலர்கள் விமரிசையாக வழி நடத்த, புனித லீமா றோஸ் ஆலயத்தை வந்து நிறைவடைந்தது. இறுதிச் செபத்தை எலியாஸ் அவர்களின் மகள் ஆங்கிலத்தில் செபித்து இறுதியில் கனடா தமிழ் கத்தோலிக்க இணைய இயக்குணர் திரு தோமாஸ் டேவிட் அவர்கள் சிலுவைப் பாதையை ஒழுங்கமைத்த மரினா அந்தோனிப்பிள்ளை அவர்களுக்கும் திருமறைக்கலாமன்றத்திக்கும் பங்கு தொண்டர்களுக்கும் நன்றி கூறி நிறைவு செய்தார்.



## திரு தோமஸ் டேவிட் அவர்களின் ரொறொன்ரோ புனித லூர்து மாதா ஆலய சிலுவைப்பாதை சிறப்புரை

கடந்த நாற்பது வருடங்களாக மத்திய ரொறொன்ரோ புனித லூர்து மாதா தேவாலயத்தில் பனித பெரிய வெள்ளிக்கிழகளில் அப்பங்கு மக்களுக்கு தமிழில் சிலுவைப்பாதையை வழி நடத்தும் திரு தோமாஸ் டேவிட் அவர்கள் ஒவ்வொரு முறையும் சிலுவைப்பாதை இறுதியில் இயேசுவின் பாடுகளில் இருந்து இறுதி உரையை ஆற்றி நிறைவு செய்வார் ஆனால் இந்த வருடம் இறைவன் இயேசுவின் வாழ் இயல்பின் முழு சரித்திர சுருக்கமும் கத்தோலிக்க திருச்சபையின் தொடர்ச்சியான இயல்பையும் விபரித்து நிறைவு செய்தார்.


இறைவன் இயேசு ஆரம்பத்தில் வார்த்தையாக இருந்தார் ஒரு பெண்ணைத் தெரிவு செய்து அவரின் வயிற்றில் கருவாக உருவாகி ஓவியமாகி உலகுக்கு அறிமுகமாகி போதனை சோதனை வேதனை சாதனைகள் பல புரிந்து சிலைவையின் மரணத்தை ஏற்று பாடுகளை அனுபவித்து சிலுவையில் ஏழு வார்தைகளைக் கூறி உலகிலே முதல் தேவ நற்கருணை பேழையாகிய தேவ மாதாவின் மடியில் வளர்த்தப்பட்டு அடக்கம் செய்யப்பட்டு, உலகம் தேவ நற்கருணை பேழைகளை இலச்சக்கணக்கில் உருவாக்கி ஆண்டவனின் பிரசன்னத்தை உறுதிப்படுத்தி இறைவன் இயேசு சிலுவைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கு முதலே குருத்துவத்தையும் தேவநற்கருணையையும் உருவாக்கி பாவ மன்னிப்பையும் உருவாக்கி திருப்பலிப்பீடத்திற்கு வருகை தந்து உலகம் முடியும்வரை நினைவு கூறுங்கள் என்று அப்போஸ்த்தலர்களையும் கத்தோலிக்க திருச்சபையையும் உருவாக்கி திருச்சபையின் அத்திவாரத்தை அப்போஸ்த்தளர்களை உருவாக்கி அவர்களை திருச்சபையின் அத்திவாரக்கற்களாக அடித்தளமிட்டு சிலுவையில் இறப்பதற்கு முதல் வழங்கிய வசன விழுமியங்களை கத்தோலிக்கதிருச்சபையின் தரவுகளாக ஏற்று இராயப்பிரின் அத்திவாரக்கல்லில் ஆரம்பித்து திறவு கோலையும் வழங்கி, முதல் முறை பூலோகத்தில் உயிருடன் இருந்தவரை பரலோகத்திற்கு ஏற்றுக்கொண்டதையும் உணர்ந்து, இறைவன் இயேசுவின் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக அதிகரித்து வரும் கத்தோலிக்க விசுவாசம் சாட்சி பகர்கின்றது ஆகவே திருப்பலியில் இறைவன் இயேசுவின் சிலுவைப்பலியை நிறைவேற்றி தேவநற்கருணைப்பேழையில் இயேசுவைச்சந்தித்து ஆயுதம் அற்ற சமாதான வாழ்வை பெறுவோம் என்று நிறைவு செய்தார்.





## 2026 இல் ரொறொன்ரோவில் 2050 பேர் திருமுழுக்கு பெற்றனர்

கனடா தேசத்தின் டொரொண்டோ உயர் மறைமாவட்டத்தில் மாத்திரம் 2050 பேர் இந்த வருடம் பாஸ்காத் திருவிழிப்பின்போது ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர். இவர்கள் எல்லோரும் வயது வந்தோர் என்பதால் கிறீஸ்தவப் புகுமுகநிலையில் சேர்க்கப்பட்டு, கிறீஸ்தவப் புகுமுகச் சடங்குமுறைக்கு ஏற்ப பல்வேறு படிநிலைகள் வழியாக அருளடையாளப் புகுமுக நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர்.




## யாழ். மறைமாவட்டத்தில் ஐந்து திருத்தொண்டர்கள் புதிய குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.



யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் சித்தரை மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு திருப்பலியில் யாழ். மறைமாவட்டத்தை சேர்ந்த திருத்தொண்டர்கள் யோண்சன் ஜோண் கில்ரன், ஸ்ரனிஸ்லொஸ் ஸ்ரிபன்ராஜ், யோண் பிலிப் யோண் எமில்ரன், கிளரேசியன் சபை திருத்தொண்டர்கள் மனுவற்பிள்ளை சுகந்தன் மற்றும் யேசுதாஸ் கிரிசாந்த் ஆகியோர் புதிய குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.



## இலங்கை, திருகோணமலை மறைமாவட்டத்தல் புனித பவுஸ்தீனாவின் திருப்பண்டம் (Relics)

திருகோணமலை இறைஇரக்க திருத்தலத்தில புனித பவுஸ்தீனாவின் திருத்திருப்பண்டம (Relics): பக்திப் பெருக்குடன் வரவேற்ற இறைமக்கள்! (06.04.2026). திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள், இந்தத் திருப்பண்டத்தை உத்தியோகªÁர்வமாகப் பொறுப்பேற்று, விசேட ஆராதனைகளை முன்னெடுத்தார்.

# யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட குருக்கள் சிலருக்கான புதிய பணி நியமனம்

அருட்தந்தை சேவியர் பேணாட் றெக்னோ - இளவாலை புனித அன்னாள் ஆலய பங்குத்தந்தை

அருட்தந்தை செபஸ்ரியன் எஸ்தாகு -- நல்லூர் பங்குத்தந்தை

அருட்தந்தை அருளானந்தம் யாவிஸ் -- யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தை

அருட்தந்தை அரசரட்ணம் எரிக் றொசான் -- முகமாலை புனித வேளாங்கன்னி அன்னை ஆலய பங்குத்தந்தை, யாழ். குடாநாட்டில் மறைமாவட்டத்திற்கு சொந்தமான தோட்டங்களுக்கு பொறுப்பாளர்

அருட்தந்தை மரிய பற்றிக் ஆனந்தகுமார் -- சில்லாலை பங்குத்தந்தை

அருட்தந்தை றெக்ஸ் சவுந்தரா -- குருநகர் பங்குத்தந்தை

அருட்தந்தை லியோ ஆம்ஸ்ரோங்க் -- தீவக மறைக்கோட்ட முதல்வர் மற்றும் அல்லைப்பிட்டி பங்குத்தந்தை

அருட்தந்தை பரமதாஸ் பத்திநாதன் -- மானிப்பாய் பங்குத்தந்தை

அருட்தந்தை அலோய் அருணேஸ்குமார் -- மண்டைதீவு பங்குத்தந்தை

அருட்தந்தை பீற்றர் அமலதாஸ் கமல்ராஜ் -- நெடுந்தீவு பங்குத்தந்தை

அருட்தந்தை பொன்ராசா டினுசன் -- எழுவைதீவு பங்குத்தந்தை

அருட்தந்தை தோமையப்பு யேசுதாசன் -- கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவ கல்லூரி உருவாக்குநர்

அருட்தந்தை சத்தியசீலன் யூட் கமில்ரன் -- முல்லைத்தீவு உதவிப் பங்குத்தந்தை

அருட்தந்தை யேசுரட்ணம் அன்ரன் கஜீஸ்காந்த் -- பருத்தித்துறை பங்கின் உதவிப் பங்குத்தந்தை

அருட்தந்தை கிறிஸ்ரி ஞானராஜ் றொகான் -- மாங்குளம் பங்கின் உதவிப் பங்குத்தந்தை

அருட்தந்தை ஜோண் பிலிப் ஜோண் எமில்ரன் -- குருநகர் பங்கின் உதவிப் பங்குத்தந்தை

அருட்தந்தை ஜோண்சன் ஜோண் கில்ரன் -- பேராலய உதவிப் பங்குத்தந்தை

அருட்தந்தை ஸ்ரனிஸ்லொஸ் ஸ்ரிபன்ராஜ் -- நாவாந்துறை பங்கின் உதவிப் பங்குத்தந்தை

**CTC NETWORK**



## யாழ் மறைமாவட்ட குரு, அருட்பணி. அருள்நேசன் அடிகளார் 27.04.2026 அன்று இறைபதம் அடைந்தார் -

யாழ். மறைமாவட்ட குருவாகிய அருட்பணி. அருள்நேசன் அடிகளார் அவர்கள் சித்திரை மாதம் 27ஆம் திகதி திங்கட்கிழமை இன்று சுகயீனம் காரணமாக இறைவனடி சேர்ந்தார்.

அருட்தந்தை அவர்கள் 1994 மார்ச் மாதம் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு யாழ். புனித மரியன்னை பேராலயம் மற்றும் குருநகர் பங்கின் உதவிப் பங்குத்தந்தையாகவும், உரும்பிராய் பங்கில் பதில் பங்குத்தந்தையாகவும், மிருசுவில், நெடுந்தீவு, செம்பியன்பற்று, ஆணைக்கோட்டை, ஊறணி, ஒட்டகப்புலம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் பங்குத்தந்தையாகவும், அத்துடன் கனடா ரொரன்ரோ தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியக இயக்குனராகவும், கனடா கத்தரீன் ஆலய பங்குத்தந்தையாகவும் பணியாற்றியுள்ளார்.

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் சார்பாக யாழ் மரமாவட்ட திருவைக்கும், அருட்தந்தையின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அருட்தந்தையின் பணிவாழ்வுக்காக இறைவனுக்கு நன்றிகூறி அவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடுகிறோம்.

## கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் மேற்கொள்ளும் அறிவிற்கும் ஆன்மீகத்திற்கும் ஆன திருயாத்திரை.

ஜூன் 27, 2026 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு புறப்படுதல் YMCA-விலிருந்து 230 டவுன் சென்டர் கோர்ட், ஸ்கார்பரோ, ON M1P 4Y7 கேப் அன்னை புனித ஸ்தலத்திற்கு (Mary the Mother of God in Cap-de-la-Madeleine, Quebec Canada) வருடாந்த தமிழ் புனித யாத்திரை செல்லுதல். பிற்பகல் 3.00 மணி முதல் இரவு 9.30 மணி வரை. அதே பகுதியில் இரவு தங்குதல்.

ஞாயிற்றுக்கிழமை காலை கியூபெக் பழைய நகரத்திற்கும், கியூபெக்கில் உள்ள புனித அன்னாள் தேவாலயத்திற்கும் செல்லுதல். நாங்கள் கியூபெக் பழைய நகரம், கப்பல் பயணம், கேபிள் கார் பயணம், அருங்காட்சியகம் மற்றும் உலக விவசாயிகள் ஆர்வமுள்ள இடங்களைப் பார்வையிடுகிறோம். மிகவும் அறிவுபூர்வமான சுற்றுப்பயணம். திங்கட்கிழமை காலை நாங்கள் புனித அன்னாள் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு மாண்ட்ரீலில் உள்ள புனித ஜோசப் தேவாலயத்தைப் பார்வையிடுகிறோம். பின் டொரொண்டோவிற்கு திருப்புகின்றோம்.

குறிப்பு: இரண்டு நாட்கள் கோட்டல்களில் தங்குதல் மற்றும் மூன்று நாட்கள் காலை உணவு மற்றும் இரவு உணவு ஆகியவை பயணச் செலவில் அடங்கும். ஒரு நபருக்கான செலவு $400.00. உங்கள் இருக்கையை முன்பதிவு செய்ய $100 முன்கூட்டியே செலுத்தவும். ஜூன் 15-ஆம் திகதி முன்னர் dtpastoralassistant@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு "e transfer" செய்யவும்.

தொடர்புகளுக்கு:

சகோதரன்
டேவிட் தோமாஸ்
647 852 3141

சகோதரி
மரினா
அந்தோனிப்பிள்ளை
647 782 0855

சகோதரன்
கிறிஸ்ரியன்
ஞானசேகரம்
647 283 0890

# புலம்பேர்ந்தோரும் புத்தாண்டும்




**நாம் நமது தாயகத்தை விட்டு புலம்பேர்ந்தோமே தவிர உளம் பிரியவில்லை**

**கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் (https://ctcnw.org/)**

# புலம்பேர்ந்தோரும் புத்தாண்டும்

## தமிழ் புத்தாண்டும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும்

தமிழ்ப் புத்தாண்டு உலகளாவிய ரீதியில் தமிழர்களால் பரவலாகக் கொண்டாடப்படுகிறது, தலைமுறை தலைமுறையாகவும், புவியியல் எல்லைகளைக் கடந்தும் புத்தாண்டு பாரம்பரியங்கள் சமமான முக்கியத்துவம் வாய்ந்தது. புத்தாண்டு குறித்த சமூகங்களுடைய தலைமுறை முறைகள் காலத்திற்கு காலம் மாறுபடுகின்றது எனிலும், அதன் சாராம்சம் பெரும்பாலும் ஒன்றாகவே இருக்கும்: பிரார்த்தனை, ஒழுங்கு, குடும்பம் மற்றும் கவனத்துடன் தயாரிக்கப்பட்ட உணவுடன் ஆண்டைத் தொடங்குவது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகங்களுக்கு, இந்தப் பண்டிகை கூடுதல் உணர்ச்சிப் பரிமாணத்தைப் பெறுகிறது. காரணம், புத்தாண்டு, மொழி, சடங்கு நினைவுகள் மற்றும் இல்லத்துடன் இணைந்திருப்பதற்கான ஒரு வழியாக மாறுகிறது. இலங்கை தமிழர் நாம் எமது தமிழர் தாயகத்தை விட்டு, தூர தேசங்களில் வாழுகின்றோம். நாம் அனைவரும் எமது தாயகத்தை மகிழ்ச்சியோடு விட்டுப்பிரிந்து வந்தவர்கள் அல்ல. மாறாக எமது தமிழர் தாயகத்தை மீட்டு எடுக்க நடந்த விடுதலைப்போரின் காரணமாக எம்மீது கடடவிழ்க்கப்பட்டிருந்த கண்மூடித்தனமான, மிலேச்சத்தனமான இன அழிப்பலிருந்து எம்மையும் எமது வருங்கால சந்ததியையும் பாதுகாக்கவே நாம் இவ்வாறு இன்று புலம்பெயர்ந்து வாழுகின்றோம். எமது உடல் இந்த மண்ணில் இருந்தாலும், எமது உயிரும் நினைவுகளும் எப்பொழுதுமே எமது தாயகத்தை சுற்றியே வலம் வந்துகொண்டிருக்கும்.

தமிழர் பண்பாடு குறித்த ஒரு சிறிய கொண்டாட்டம் கூட எமக்கு தாயகத்தோடு ஆழமான பிணைப்பை உணரச் செய்யும்: வாசற்கதவருகே ஒரு கோலம், காலையில் ஏற்றப்படும் ஒரு விளக்கு, ஒரு எளிய பூஜை ஏற்பாடு மற்றும் சமையலறையில் தயாரிக்கப்படும் ஒரு பரிச்சயமான உணவு என இலங்கையில் நாம் வாழ்ந்த அந்த எழிய வாழ்வை சீர்தூக்கி பார்க்கும் பொழுதெல்லாம் கண்ணீர் மட்டுமே மிஞ்சும். ஆயினும் இங்கிருந்து நாம், எம்மானாலான உதவிகளை எமது தாயக மக்களுக்கு வழங்கும் போது, எம் மனதில் பெரிய ஆறுதல் பிறக்கின்றது.

ஊழல் நிறைந்த கடந்த கால ஆட்சி முறைமையால், இலங்கையில், யுத்தம் இல்லை, ஆனால் ஸ்திரமற்ற பொருளாதாரம், இன்னும் எம் மக்களை தினம் கொன்றொழித்துக்கொண்டு தான் இருக்கின்றது. புலம்பேர் மக்கள் எமது உதவிகள் இல்லையெனில், எமது தாயகத்தில் பல உறவுகள், வறுமையின் நிமித்தம் தமதுயிரையே மாய்த்திருப்பார்கள்.

எமது தமிழர் தாயகம், தமிழர் நாம் சுதந்திர காற்றை சுவாசித்து வாழும் நாடாக இன்னும் மாறவில்லை என்பது தான் உண்மை., "நான் இறந்த பின் உடலை எனது தாயகத்தில் தான் அடக்கம் செய்ய வேண்டும்" என்று நம்மில் பலர் கூற கேட்டிருப்போம். அந்த அளவுக்கு நாம் எமது தாயகத்தை நேசிக்கின்றோம். இந்த புத்தாண்டிலாவது இறைவன் எமது நாட்டு தலைவர்களுக்கு தெளிந்த நல் அறிவைக்கொடுக்க வேண்டும். அனைவரும் சமாதானம், சமத்துவத்துடன் வாழ வழி செய்ய வேண்டும்.

தமிழர்நாம் உலகில் எங்கும் பல்கி பரந்து வாழ்ந்து வருவதனால் தான், தெற்காசியாவிற்கு வெளியேயும் புத்தாண்டு இன்னும் வலுவான முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. எமது தமிழர் பாரம்பரியத்தை நாம் பாதுகாப்பது மட்டுமல்ல, அதன் அர்த்தத்தை அன்றாட வாழ்வில் முன்னோக்கி எடுத்துச்சென்று தமிழர் பாரம்பரியமே சிறந்தது என்று எமது வாழ்வால் பறைசாற்ற இந்த புத்தாண்டில் திடமாக தீர்மானிப்போம்.

தமிழை எம் மூச்சாக கொண்டிருக்கும் கிறிஸ்தவர் நாம், இப்புத்தாண்டில், அகில உலகிலும் இப்புத்தாண்டை கொண்டாடும் தமிழ் சகோதர சகோதரிகளோடு இணைந்து, இப்புத்தாண்டை கொண்டாடுவோம். தமிழர் தாயக விடியலுக்காய் காத்திருப்போம்.

ஆசிரியர் டேவிட் தோமஸ்

## சித்திரை மாதம் திவ்விய நற்கருணை மாதம்



சித்திரை மாதம் திவ்விய நற்கருணைக்கு பெரிதும் அர்ப்பணிக்கப்பட்ட மாதம், இது புனித வியாழனின் போது நற்கருணை நிறுவப்பட்டதையும் இயேசுவின் உண்மையான பிரசன்னத்தையும் எடுத்துக்காட்டும் மாதமும்.

பரிசுத்த ஆவியின் மீதான பக்தி மாதம்: இது பெரும்பாலும் பரிசுத்த ஆவியின் மீது கவனம் செலுத்தும் மாதமாகக் கருதப்படுகிறது.

ஆன்மீகப் புதுப்பித்தல்: இது ஒரு வசந்த கால மாதம் என்பதால், பாவ அறிக்கை, செபம் மற்றும் நற்கருணை பெறுதல் ஆகியவற்றின் மூலம் □ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும்□ காலமாக இது கருதப்படுகிறது.

திவ்விய நற்கருணை பக்தி என்பது கத்தோலிக்க விசுவாசத்தின் அடித்தளமாகும் – அதாவது, ஒவ்வொரு திருப்பலியிலும் நாம் உட்கொள்ளும் புளிப்பில்லாத அப்பமும் திராட்சை இரசமும், உருமாற்றத்தின் மூலம் இயேசு கிறிஸ்துவின் உடலாகவும், இரத்தமாகவும், ஆன்மாவாகவும், தெய்வீகமாகவும் மாறுகின்றன என்ற நம்பிக்கையாகும். இவ் திவ்விய நற்கருணையை ஆண்டவர் இயேசு சித்திரை மாதம் வருகின்ற தவக்கால புனித வார புனித வியாழனில் நிறுவினார். இதனால் தான் திருஅவை சித்திரை மாதம் முழுவதும் திவ்விய நற்கருணைக்காக அர்ப்பணிக்கப்பட்ட மாதமாக அனுசரிக்கின்றது.

இக்காலத்தில், உயிர்த்தெழுந்த கிறிஸ்து மீதான மற்றும் அவர் தம் திருத்தூதர்களுக்கு விட்டுச்சென்ற நற்கருணை மீதான தங்கள் புரிதலையும் பக்தியையும் ஆழப்படுத்திக்கொள்ளுமாறு திருச்சபை கத்தோலிக்கர்களை அழைக்கிறது.

ஆராதனையில் நேரத்தைச் செலவிடுவதோ அல்லது நற்கருணைப் பேழைக்கு முன்பாக ஜெபத்தில் அமர்வதோ கிறிஸ்துவுடனான உங்கள் உறவில் வளர ஒரு சிறந்த வழியாகும். திவ்விய நற்கருணை அப்பம் மற்றும் திராட்சை இரசத்தின் உருமாற்றத்தின் வழியாக, நாம் கிறிஸ்துவின் திருவுடலையும் திருஇரத்தத்தையும் பெற்றுக்கொள்கிறோம் என்றால் இது எப்பேர்ப்பட்ட அற்புதம்! இயேசுவை ஆராதிப்பதற்கான அவருடைய பிரசன்னமாகவும் விளங்கும் ஒரு சக்திவாய்ந்த கொடையாகும். இதற்கு நிகரான வேறு எந்தக் கொடையும் மூவுலகிலும் இல்லை!

திருவிவிலியத்தை வாசிப்பது, குறிப்பாக ஈஸ்டர் காலம் முழுவதும் வாசிக்கப்படும் திருத்தூதர்களின் நூலை வாசிப்பது, திருச்சபையின் வரலாறு மற்றும் பாரம்பரியத்தில் ஆழமாக மூழ்குவதற்கு ஒரு சிறந்த வழியாகும். திருத்தூதர்கள் நற்செய்தியைப் பரப்பி, திவ்விய நற்கருணையில் உள்ள உண்மையான பிரசன்னத்தைப் போதித்தனர்; அது தலைமுறை தலைமுறையாக திருஅவையால் மரியாதையோடு பின்பற்றப்பட்டு வருகின்றது..


திருப்பலியில் நற்கருணையை அபிஷேகம் செய்யும் போது ஒவ்வொரு குருவும் கூறுவதையே எதிரொலிக்கும் விதமாக, புனித பவுல் திருநற்கருணையில் உள்ள மெய்யான பிரசன்னத்தைப் பற்றி கீழ்காணுமாறு எழுதுகிறார்.

“நான் ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொண்டதை உங்களுக்கும் கொடுத்தேன்; அதாவது, ஆண்டவராகிய இயேசு, தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில், அப்பத்தை எடுத்து, நன்றி செலுத்தியபின், அதைப் பிட்டு, ‘இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் என் உடல்; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்’ என்றார். அப்படியே, கிண்ணத்தையும் எடுத்து, ‘இந்தக் கிண்ணம் என் இரத்தத்தினால் உண்டான புதிய உடன்படிக்கை; நீங்கள் இதைக் குடிக்கும்போதெல்லாம், என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்’ என்றார். ஏனெனில், நீங்கள் இந்த அப்பத்தை உண்டு, இந்தக் கிண்ணத்தில் பருகும்போதெல்லாம், அவர் வரும்வரை ஆண்டவரின் மரணத்தை அறிவிக்கிறீர்கள். ஆகையால், எவர் தகுதியற்ற முறையில் ஆண்டவரின் அப்பத்தை உண்கிறாரோ அல்லது கிண்ணத்தில் பருகிறாரோ, அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் பதில் சொல்ல வேண்டியிருக்கும். ஒருவன் தன்னைத்தானே சோதித்துப் பார்த்து, அதன்பின் அப்பத்தை உண்டு, கிண்ணத்தில் பருக வேண்டும். ஏனெனில், உடலைப் பகுத்தறியாமல் எவன் உண்கிறானோ, அவன் தனக்குத்தானே தண்டனையை வருவித்துக்கொள்கின்றான்” (1 கொரிந்தியர் 11:23-29).

எனவே! திவ்விய நற்கருணை என்பது, கடவுள் நம்மோடு முப்பொழுதும் வாழும் அவருடைய இறை பிரசன்னம். இதனால் தான் இயேசு கூறுவார், உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன்.

**மரினா அந்தோனிப்பிள்ளை**

## கிறிஸ்து உயிர்த்தெழுந்தார். மரணத்தின் அடிமைத்தனம் உடைக்கப்பட்டது



உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் எவரும் இறப்பினும் வாழ்வார். உயிரோடு இருக்கும் போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார். இதை நீ நம்புகிறாயா? (யோவா 11:25-26)

இறப்பு ஒரு பிரிவு உயிர் உடலை விட்டு பிரிகிறது. அசைந்தாடிய உடல் கட்டையாகிறது இதயத்துடிப்பு, இரத்த ஓட்டம், பார்வை பேச்சு, உணர்வு, உணர்ச்சி, போன்ற உயிர் செயல்பாடுகள் எல்லாம் நின்றுவிடுகிறது. உடல் உறவை விட்டு, வீட்டை விட்டு, குடும்பத்தை விட்டு, ஊரைவட்டு பிரிகிறது என்பதை எவருமே விரும்புவதில்லை. மரணம் மிகவும் வேதனைக்குரியது, துக்கமானது துயரமிக்கது, பரிதாபத்திற்குரியது. மரணம் சோகமானது, ஆனால் இம் மண்ணகத்தில் பிறந்த நம் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு நாளில் ஒரு நிலையில் நாம் இறப்பை சந்தித்துத்தான் ஆக வேண்டும். இதை எல்லோராலும் அவ்வளவு எளிதாக ஏற்றுக்கொள்ள இயலாது. ஆனால் சாவு என்பது தவிர்க்க முடியாத ஒரு உண்மை. இறப்பிற்குப்பின் நிலைவாழ்வு உண்டு என்பதை தெரிந்தும் இறப்பின் துக்கத்தில் மறந்துவிடுகின்றோம். ஒவ்வொரு சமயமும் இறப்பு நிரந்தரமில்லை, அதற்குப்பின்னும் வாழ்வு உண்டு. என்பதை அதனதன் படிப்பினையில் போதிக்கிறது. கிறிஸ்தவ நம்பிக்கையில் இறப்புக்குப்பின் உயிர்ப்பு தீர்ப்பு நிலை வாழ்வு பற்றிய போதனைகள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. நிலை வாழ்வு என்பதை பரலோக வாழ்வு விண்ணக வாழ்வு முடிவில்லாத வாழ்வு மோட்ச வாழ்வு நிறை வாழ்வு என்றும் அழைக்கின்றோம்.

மரணத்தின் அடிமைத்தனம் உடைக்கப்பட்டது. கிறிஸ்து உயிர்த்தெழுந்தார். இயேசு நமக்கு உதவவும், நம்மை வழிநடத்தவும், எதிர்காலத்திற்கான நம்பிக்கையை அளிக்கவும் உண்மையில் உயிருடன் இருக்கிறார் என்ற உறுதியுடன் நாம் நாளையை எதிர்கொள்ளலாம். மேலும் அவர் உயிருடன் இருப்பதால் நமது பிரச்சினைகளை தீர்க்க முடியாதவை அல்ல அவரது கல்லறை ஆடைகளில் உடைந்த கிரிசாலிஸ் கிறிஸ்து மரணத்தின் மீதும் வெற்றி பெற்றவர் என்பதை அறிவிக்கிறது. அவர் உயிருடன் இருப்பதால் நாம் மரணத்தை மட்டுமல்ல, எதையும் வெற்றிகொள்ளலாம்.

**திருமதி ஜேமணி டேவிட்**

# உலக இளைஞர் தினம் 2027

உலக இளைஞர் தினம் 2027 (கொரியன்: 2027) என்பது தென் கொரியாவின் சியோலில் ஆகஸ்ட் 3 முதல் 8, 2027 வரை நடைபெறும் ஒரு கத்தோலிக்க விழாவாகும். போர்த்துக்கலின் லிஸ்பனில் நடைபெற்ற உலக இளைஞர் தினம் 2023-இன் நிறைவுத் திருப்பலியின் முடிவில் முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் இதை அறிவித்தார். 2025-இல் திருத்தந்தை பிரான்சிஸின் மறைவுக்குப் பிறகு, திருத்தந்தை பதினான்காம் லியோ இந்த நிகழ்வை வழிநடத்துவார், இது அவரது திருத்தந்தை ஆட்சியின் கீழ் நடைபெறும் முதல் உலக இளைஞர் தினமாக அமையும். மேலும், 1995-இல் பிலிப்பைன்ஸின் மணிலாவில் நடைபெற்றதற்குப் பிறகு ஆசியாவில் நடைபெறும் முதல் உலக இளைஞர் தினம் இதுவாகும், அத்துடன் கிறிஸ்தவ சிறுபான்மை நாட்டில் நடைபெறும் முதல் நிகழ்வும் இதுவே.

41வது உலக இளைஞர் தினம் (WORLD YOUTH DAY) 2026-ஆம் ஆண்டில் உலகெங்கிலும் உள்ள உள்ளூர் மறைமாவட்டங்களில் கொண்டாடப்படும். இது 2027-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தென் கொரியாவின் சியோலில் நடைபெறும் ஒரு சர்வதேசக் கூட்டத்துடன் நிறைவடையும். கிழக்கு ஆசியாவில் முதல் முறையாக உலக இளைஞர் தினம் நடைபெறும் 2027 நிகழ்வானது, **“தைரியம் கொள்ளுங்கள் (Take Courage), நான் உலகத்தை வென்றுவிட்டேன்” (யோவான் 16:33)** என்ற கருப்பொருளைக் கொண்டிருக்கும். உலகளாவிய இளைஞர்களை ஒன்றிணைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது என USCCB மற்றும் EWTN APAC தெரிவிக்கின்றன.

சியோல் 2027 உலக இளைஞர் தினத்திற்கான முக்கிய விவரங்கள்: திகதிகள்: முக்கிய நிகழ்வுகள் ஜூலை 29 முதல் ஆகஸ்ட் 8, 2027 வரை திட்டமிடப்பட்டுள்ளன. இதில் மறைமாவட்டங்களில் நாட்கள் (ஜூலை 29–ஆகஸ்ட் 2) மற்றும் அதைத் தொடர்ந்து சியோலில் நிகழ்வுகள் (ஆகஸ்ட் 3–8) இடம்பெறும்.

**கருப்பொருள் மற்றும் கவனம்:** தைரியம் கொள்ளுங்கள்! நான் உலகத்தை வென்றுவிட்டேன். (யோவான் 16:33). இந்த நிகழ்வு கொரியாவின் வேதசாட்சிகளின் வரலாற்றை முன்னிலைப்படுத்துவதோடு, கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக இல்லாத ஒரு நாட்டில் ஒற்றுமையை வளர்ப்பதிலும் கவனம் செலுத்துகிறது.

**சின்னம்:** செப்டம்பர் 24, 2024 அன்று வெளியிடப்பட்ட இந்தச் சின்னம், தியாகத்தையும் இளமையையும் குறிக்கும் வகையில், கொரிய எழுத்துக்கலை வரிகளால் வடிவமைக்கப்பட்ட சிவப்பு மற்றும் நீல நிற சிலுவையைக் கொண்டுள்ளது. இதன் மையத்தில் உள்ள இயுங் என்ற எழுத்து இயேசுவின் வெற்றியைக் குறிக்கிறது என வத்திக்கான் நியூஸ் மற்றும் விக்கிப்பீடியா தெரிவித்துள்ளன.

**நிகழ்ச்சி நிரல்:** WYD சியோல் 2027-இன் படி, தொடக்கத் திருப்பலி, வரவேற்பு விழா, இளைஞர் விழா, சிலுவைப் பாதை, மற்றும் நிறைவுத் திருப்பலியுடன் கூடிய இறுதி அஞ்சலி ஆகியவை முக்கிய நிகழ்வுகளாகும்.

திருச்சபையின் உலகளாவிய தன்மைக்கான ஒரு அற்புதமான அடையாளமாக இது விளங்குகிறது என அதிகாரப்பூர்வ அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பான, கலாச்சார அனுபவத்தை உறுதிசெய்து, ஆயிரக்கணக்கான இளைஞர்களை சியோலுக்கு வரவேற்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக உள்ளூர் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

**குறிப்பு:** தென் கொரியாவின் சியோலில் ஆகஸ்ட் 3 முதல் 8, 2027 வரை நடைபெறும் இந்நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புவோர் என்னோடு தொடர்பு கொள்ளவும்:

**டேவிட் தோமாஸ்**
**647 852 3141**
Email : tamilcatholicpublication@gmail.com
**https://ctcnw.org/**






கனடா கீவாடின்-லே பெருநகர் பேராயர் சூசை இயேசு ஆண்டகை ரொறன்ரோ கத்தோலிக்க தமிழ் சமூகத்தின் 31வது Outreach Easter Dinner நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்-தார்.

(இவர் தை 2026 இல் பேராயராக அருட்பொழிவு செய்யப்பட்டார்)













இந்நிகழ்வில் கலந்துகொண்ட பல குருக்கள், பெருமக்கள் அடங்கிய சில படங்களை மேலே காணலாம்




**வன்முறையை நிராகரித்தல்,**
**அன்பு மற்றும் நீதி மூலம்**
**அமைதியைக் கட்டியெழுப்புதல்,**
**மற்றும் மோதலைக் குறைக்கும்**
**வாழ்க்கை முறையில்**
**இதை உள்ளடக்குதல்**

# CANADA TAMIL CATHOLIC NETWORK SERVICE

## கனடா தமிழ் கத்தோலிக்க வெளியீட்டக இணையம்

### செயற்பாடுகள்

01.சகல அரசசாசன விண்ணப்பங்கள் அனைத்தும் இங்கே நிரப்பிக்கொடுக்கப்படும்
02. குடியகல்வு குடிவரவு தொடர்பான வேலைகள் செய்துகொடுக்கப்படும்
03. "அன்பு மக்களே" சஞ்சிகை வெளியிடல்
05. புனித ஸ்தலங்களுக்கான யாத்திரை பயண ஒழுங்குகள் மேற்கொள்ளல்
06. வாரம்தோறும் பரம்பொருள் வானொலி நிகழ்வு
07. ஆன்மீக நிகழ்வுகள் விசேட நிகழ்வுகள் விளம்பரங்கள் ஒளிபரப்பு செய்யப்படும்
08. ஞானொடுக்கம் தியானம் கருத்தரங்குகள் நடாத்துதல்
09. ஆங்கில தமிழ் மொழிபெயர்ப்பு
10. ODSP: ONTARIO DISABILITY SUPPORT PROGRAMME
11. social assisiance (welfare)
12. volunteer support

### COUNSELLING

01. குடும்ப பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்கும் குடும்ப உளவளத்துணை
போதைவஸ்து பாவனைக்கு அடிமையாகி வாழும் அனைவருக்குமான உளவளத்துணை

**உங்கள் தொடர்புகளுக்கு**
**647 - 852 - 3141**







